08.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.24/2016**

அ.சா.**2**

**பெயர்.திரு.முருகன்**

சாட்சி இன்று மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எனது சாட்சியத்தில் இரவு 2 அல்லது 2.30மணிக்கு கூட்ரோடு ஒயின்ஷாப் பக்கத்தில் அதிகம் சத்தம் கேட்டு போனேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அங்கு இருவரை காவல்துறையினர் பிடித்துபோனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவர்களை கட்டி வைத்து இருந்ததை மடடும் தான் பார்த்தேன். யார் அவர்களை கூப்பிட்டு சென்றார்கள் என்று பார்க்கவில்லை. சடலத்தை அதிகாலை 4.00மணிக்கு வந்து எடுத்து சென்றார்கள். எனக்கு இந்த விசயம் 2.30மணிக்கு தான் தெரியும். காவல்துறை விசாரணையிலும் நான் இந்த விபரத்தை தான் சொல்லியுள்ளேன். நான் காவல்துறை விசாரணையில் எதிரிகளை நான் மடக்கி பிடித்ததாக சொல்லவில்லை. அதே போல் இறந்த நபர் என்னை கொல்லறாங்க என்று கத்திய விபரம் எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். இரவு 2மணிக்கு சம்பவ இடத்தில் கேட்டார்கள். என்னை 2 முறை காவல்துறையினர் விசாரித்தார்கள். காலை 8 முதல் 9 மணிக்கு விசாரித்தார்கள். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், நான் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் கையெழுத்து எதாவது போட்டேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

08.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

**SC No.24/2016**

அ.சா.**1**

**பெயர்.திரு.ஆறுமுகம்**

சாட்சி இன்று மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரை நான் தான் கொடுத்தேன். புகாரை காவல்நிலையத்தில் எழுதினார்கள். புகார் கொடுக்கும்போது புகாரில் சில நபர்கள் மேற்கு பக்கம் ஓடியதாகவும், 2பேர் கிழக்கு பக்கம் ஓடியதாகவும் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. நான் படிக்கவில்லை. வழக்கில் இறந்துபோன நபரும், எதிரிகளும் ஒன்றாக செல்லும்போது நான் பார்க்கவில்லை. நான் மூவரும் மது அருந்த செல்லும்போது பார்க்கவில்லை, ஆனால் அவர்கள் ஓட்டலில் சாப்பிடும்போது பார்த்தேன். இது குறித்து நான் புகாரில் சொல்லவில்லை. அவர்கள் சாப்பாட்டை வாங்கிக்கொண்டு சென்று சாப்பிட்டார்கள். இறந்த நபர் தான் வாங்கி சென்றார். இந்த விபரத்தை நான் காவல்துறை விசாரணையில் சொன்னேன். எனக்கு பாபு சொல்லிதான் இவர்கள் ஊருக்கு வந்த விபரம் தெரியும். எனக்கு பிடித்ததற்கு பிறகு தான் எதிரிகள் யார் என்று தெரியும். அதற்கு முன்பு அவர்கள் யார் என்று தெரியாது. ஆஜர் 1, 3 எதிரிகளை நாங்கள் பிடித்து பைக்கில் வைத்து காவல்நிலையத்திற்கு கூப்பிட்டு சென்றோம். நாங்கள் 7 பேர் சென்றோம். சம்பவ இடத்தில் நிறைய பேர் இருந்தார்கள். அவர்கள் யார் யார் என்றால் ஊர்க்காரர்கள் தான். நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றபோது சம்பவ இடத்தில் 3பேரை நிற்க வைத்துவிட்டு, காவல்நிலையத்திற்கு 4 பேர் சென்றோம். நான் காவல்நிலையத்திற்கு 11.00மணிக்கு சென்றேன். காவல்நிலையத்தில் புகார் அளித்து விட்டு இரவு சுமார் 1மணிக்கு வீட்டிற்கு வந்தேன். எனக்கு நாகையா என்பவரை தெரியும். நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றபோது

அவரும் உடன் வந்தார். நாகையா என்பவரிடம் நாங்கள் அழைத்து சென்ற இருவரையும் ஒப்படைத்து அவர்களை காலையில் கூட்டிவாருங்கள் என்று ஒப்படைத்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. முருகன் த/பெ பாலகிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியாது. முருகன் மாமா சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் கக்கனூர் செல்லும் சாலையில் சூளை வைத்துள்ளார் என்றால் ஆமாம். முருகன் சம்பவ இடத்திற்கு வரவில்லை. அவர் மெயின்ரோட்டில் எதிரிகளை பிடித்தார். சடலத்தை இரவு 1மணிக்கு மேல் காவல்துறையினர் எடுத்து சென்றார்கள். எனக்கு சம்பவத்தின்போது புகாரில் சொல்லியுள்ள மேற்கு பக்கம் ஓடிய சில நபர்கள் யார் என்று தெரியாது. மேற்கு பக்கம் அத்தியூர் சாலை உள்ளது. அந்த வழியாக வந்தால் வடக்கு நோக்கி சென்றால் அத்தியூருக்கும், தெற்கு பக்கம் சென்றால் திருவண்ணாமலை சாலைக்கும் வரலாம் என்றால் சரிதான். நான் சென்று பார்த்தபோது இறந்த நபருக்கு தலை முழுவதும் நசுக்கப்பட்டு இருந்தது. வலது, இடது என்ற பேதம் எதுவும் இல்லை. நான் போகும்போது அவர் எதாவது பேசினாரா என்றால் இல்லை. இறந்துபோனவரை அடித்ததை நாங்கள் யாரும் பார்க்கவில்லை. பொதுவாக ஒயின்ஷாப்பில் மது வாங்குபவர்கள் அங்கு பின்னால் அமர்ந்து தான் மது அருந்துவார்கள் என்றால் இல்லை. நான் காவல்துறையினரிடம் இறந்துபோன நபருக்கும் எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என சொல்லவில்லை. என்னை போலீசார் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை காவல்நிலையத்திலும், வானூர் நீதிமன்றத்திலும் தான் விசாரித்தார்கள். வேறு எங்கும் விசாரிக்கவில்லை. என்னை காவல்நிலையத்தில் காலை 10மணிக்கு மேல் விசாரித்தார்கள். யார் விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அவர் அங்கு அமர்ந்து குடித்துக்கொண்டிருந்தார் என்றும், நாங்கள் சத்தம் போடவே அவர் பயந்து ஓடினார் என்றும், அந்த சமயத்தில் அவரை நாங்கள் பிடித்து சந்தேகத்தின்பேரில் அவர்தான் கொலை செய்துவிட்டதாக காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல. நான் அடித்ததை பார்க்கவில்லை. நான் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன ராக்கி ரமேஷ் என்பவர் பிரபல ரவுடி என்றும் அவர் மீது பல கொலை

வழக்குகள் உள்ளது என்றும், அதில் இறந்துபோன சரவணன் என்பவருக்கும் தொடர்பு இருந்ததால் அவர்கள் தான் இறந்த நபரை கொலை செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் காலையில் மருத்துவமனைக்கு சடலத்தின் அருகில் செல்லவில்லை. அங்கு என்னை காவல்துறையினர் எதுவும் விசாரிக்கவில்லை.